வாசம் எழுதபடவில்லை என்றால் சரிதான், வா சாஆ 16 கிரைய பத்திரம் கிரையம் பெறுபவர் கிரைய தொகையை வாங்க வராத காரணத்தினால் கிரையம் ரத்து செய்யபடுவதாக வாசம் எழுபட்டுள்ளது என்றால் சரியல்ல, தாவா சொத்து எனது தனிபட்ட சொத்து என்று நான் பொய்யாக வழக்கு நடத்துகிறேன் என்றால் சரியல்ல, தாவா சொத்தின் சர்வே எண் நாண்குபுற எல்லை சரியாக தெரியாதாதல் நான்பொய்யாக வழக்கு நடத்துகிறேன் என்றால் சரியல்ல, 20,05,2023 தேதியில் அத்து மீறி நுழைந்ததாக சொல்லியதற்கு நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன என்றால் இல்லை, நான் வழக்கு தாக்கல் செய்தற்கு வழக்கு மூலம் ஏதும இல்லை பொய்யாக வழக்கு பபோட்டுள்ளன் என்றால் சரியல்ல, 13,04,2023 தேதியில் தாவா சொத்தில் எந்த வித இடையூறு பிரதிவாதி செய்மாட்டேன் என்று என்னிடம் எழுதிகொடுக்கவில்லை என்றால் சரிதான், வழக்கு செலவு தொகையுடம் தள்ளுபடி செய்யதக்கது என்று சொன்னால் சரியல்ல,

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
Sd/-A.Tamilselvan, M.L.,
Principal Subordinate Judge ,
Villupuram

முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

OS. No. 839/2024

Witness-PW-1

பெயர் / முரளி

**த.பெ - துரைசாமி**

**இன்று** (10.11.2025) **சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.**

சத்தியமாகச் சொல்கிறேன்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தற்போது என்னிடம் காட்டப்படும் பிரமான வாக்குமூலம் நான் தாக்கல் செய்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் எனக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியும் நான் முதன்மை சாட்சியை பிரமாணம் பத்திரிக்கையில் உள்ள விவரங்களை படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான், நான் பிராமாண பத்திரிக்கையில் முதலாவதாக குறிப்பிட்டுள்ள ஆவணம் என்ன என்றால் ங **02,04,2020** பாதி பெயருக்கு பிரதிவாதி ரூ,**1இ50இ000** க்கு எழுதிக் கொடுத்த தாவா பிராமிஸ்சரி நோட்ங, நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன் என்ன பயிர் செய்து வருகிறேன் என்றால் நெல் மற்றும் உளுந்து பயிர் செய்து வருகிறேன் எவ்வளவு ஏக்கர் நிலம் உள்ளது என்றால் சுமார் மூனரை ஏக்கர் உள்ளது அந்த மூனரை ஏக்கர் நிலமும் யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் தான் உள்ளது அந்த நிலத்திலிருந்து எனக்கு எவ்வளவு வருமானம் வரும் என்றால் வருடத்திற்கு சுமார் **2,5** லட்சம் வரும் பிரதிவாதி புகழேந்தி எந்த கிராமத்தைச் சேர்ந்தவர் என்றால் குன்னல வாடி கிராமத்தைச் சேர்ந்தவர் என்னுடைய சாத்தியப்பிரமாண பத்திரிக்கையில் பிரதிவாதி புகழேந்தி குன்னல வாடிகிராமத்தைச் சேர்ந்தவர் என்றுதான் சொல்லி உள்ளேன் என்றால் அவ்வாறு தான் சொல்லி உள்ளேன் நான் பணம் திரும்ப கேட்டு பிரதிவாதிக்கு அறிவிப்பு ஏதாவது அனுப்பினேன் என்றால் அனுப்பினேன் அந்த அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக் கொண்டாரா என்றால் இல்லை அது திருப்பப்பட்டு விட்டது அந்த அறிவிப்பில் என்ன முகவரி சொல்லி அனுப்பப்பட்டது என்றால், கொண்டலவாடி திருவெண்ணைநல்லூர் தாலுகா என்று குறிப்பிட்டுள்ளது அறிவிப்பு திரும்ப வந்த பிறகு பிரதிவாதியை எப்பவாவது சந்தித்து கேட்டேனா என்றால் திருக்கோவிலூர் டவுனில் வைத்து பிரதிவாரியிடம் கேட்டேன், பிரதிவாதியின்

கிராமத்தில் அல்லது பிரதிவாதிக்கு தெரிந்தவர்கள் மூலம் நான் ஏதாவது கேட்டேனா என்றால் இல்லை பிரதிவாதிக்கு சொத்து ஏதாவது உள்ளதா என்று தெரியுமா என்றால் அவர் பெயரில் சொத்து இல்லை அவரது மனைவி அரசாங்க ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் பிரதிவாதியின் மனைவி உடன் வந்தாரா என்றால் இல்லை நான் கடன் கொடுத்தது சம்பந்தமாக கடன் கொடுப்பதற்கு முன்பாக பிரதிவாரியின் மனைவியிடம் கேட்டேனா என்றால் கேட்டேன் சாட்சி பின்னிட்டு பணம் கொடுப்பதற்கு முன்பாக பிரதிவாதியின் மனைவியிடம் கேட்கவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார் பணம் கொடுத்த பிறகு தான் திரும்ப தரவில்லை என்று பிரதிவாதியின் மனைவியிடம் கேட்டேன்நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் நேரம் கொரோனா பறவை காரணமாக ஊரடங்கு உத்தரவு போட்ட நேரம் என்றால் சரிதான் அதனால்தான் திருக்கோவிலூர் டவுனில் வைத்து பணம் கொடுத்தேன் ஊரடங்கு உத்தரவின் போது பேருந்து நிலையத்திலோ அல்லது வீதிகளிலோ யாரும் நடமாட்டம் இல்லை என்றால் சரிதான் நானும் பிரதிவாதி மட்டும் இருந்தோம் நான் திருக்கோவிலூர் பேருந்து நிலையத்திற்கு எப்படி வந்தேன் என்றால் எனது இருசக்கர வாகனத்தில் வந்தேன் பிரதிவாதி எப்படி வந்தார் என்றால் அவர் தான் என்னிடம் கடன் கேட்டு போன் செய்தார் அவர் இருசக்கர வாகனத்தில் தான் வந்திருந்தார் திருக்கோவிலூர் பேருந்து நிலையத்தில் உள்ள டீ கடையில்தான் நான் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான் டீக்கடையின் கடை பெயர் தெரியுமா என்றால் படை பெயர் தெரியாதுஊரடங்கு உத்தரவின் காரணமாக டீக்கடை மூடப்பட்டிருந்தது என்றால் சரிதான் கடைக்கு முன்பாக வெளியே நின்று இருந்தோம்ஊரடங்கு உத்தரவின் காரணமாக வங்கியில் அதிக தொகை எடுக்க முடியாது அவ்வாறு இருக்கையில் ரூபாய் ஒன்றரை லட்சம் எவ்வாறு கொடுத்தேன் என்றால் நான் வீட்டில் வைத்திருந்த பணத்தை வைத்து தான் கொடுத்தேன் என்றால்எத்தனை ரூபாய் கட்டுகள் கொடுத்தேன் என்றால் **500** ரூபாய் கட்டுகள் மூன்று கொடுத்தேன் பணத்தை நான் எண்ணி தான் கொடுத்தேனா என்றால் எண்ணி தான் கொடுத்தேன் பிரதிவாரி எண்ணிப் பார்த்தாரா என்றால் அவரும் எண்ணிப் பார்த்தார் நான் பணம் கொடுத்த நாளில் என்ன கிழமை என்றால் அது ஞாபகம் இல்லை அப்ப என்ன நேரம் இருக்கும் என்றால் மதியம் சுமார் •**230** மணி இருக்கும், பிரதிவாதி அந்த பணத்தை வண்டியில் எடுத்து சென்று விட்டாரா என்றால் வண்டியில்தான் எடுத்து சென்றார், வழக்கு பிராமீஸ்வரி நான் தான் வாங்கி வந்தேன் என்றால் சரிதான் அந்தப் பிராமிஸ்சரி நோட் அச்சிடப்பட்டதா நிரப்பப்பட்டதா அல்லது நிரப்பப்படாமல்

இருந்ததா என்றால் நிரப்பப்பட்டு ,பிராமிஸ்சரி நோட் எங்கு வைத்து வாங்கினேன் என்றால் திருக்கோவிலூர் டவுனில் உள்ள கடையில்  தான் வாங்கினேன்அந்த கடை பெயர் தெரியுமா என்றால் தெரியாது, கடை எந்த பகுதியில் உள்ளது என்றால் கிழக்கு பக்கம் உள்ளது, கடை திறந்து இருந்ததா அல்லது மூடி இருந்ததா என்றால் கடை மூடி இருந்தது நான் கடை உரிமையாளரின் வீட்டுக்கு சென்று தான் வாங்கி வந்தேன் பிராமிஸ்சரி நோட்டில் எத்தனை ஸ்டாம்ப் ஒட்டினேன் என்றால் இரண்டு ஸ்டாம்ப் ஒட்டினேன், நான் தான் ஒட்டி வாங்கி வந்தேன் என்றால் கையெழுத்து போடும்போது தான் ஒட்டினேன் பணம் வாங்கிய பிறகு பிரதிவாதி கையெழுத்து போட்டாரா என்றால் பணம் வாங்குவதற்கு முன்பாகவே கையெழுத்து விட்டார் அதன் பிறகு பணம் வாங்கிக் கொண்டார் எந்த நிற பேனா மையில்  கையெழுத்து போட்டார் என்றால்கருப்பு நிற ஜெல் பேனாவில் கையெழுத்து விட்டார்ஸ்டாம்ப் மீது கையெழுத்து விட்டாரா அல்லது அதற்கு கீழே கையெழுத்து போட்டாரா என்றால் மீதும் கையெழுத்து விட்டார் அதற்கு கீழேயும் கையெழுத்து விட்டார்அவர் கையெழுத்து விட்ட போது அடித்தல் திருத்தல் எதாவது இருந்ததா என்றால் இல்லை பிரதிவாதி கையெழுத்து விடும் போது நான் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன் என்றால் சரிதான் நான் பார்த்துக் கொண்டிருந்தேன் பிரதிவாயிடம் கையொப்பம் மட்டும் வாங்கினேன் என்றால் சரிதான் ,  கையெழுத்து போட்டு விட்டு பணத்தை வாங்கிக் கொண்டு சென்று விட்டார் என்றால் சரிதான் நான் வீட்டுக்கு எடுத்துச் சென்று விட்டேன் என்றால் சரிதான் கையெழுத்து விட்டபோது நானும் பிரதிவாதியும் தான் இருந்தோம் என்றால் சரியல்ல சாட்சி பாலன் என்பவரும் இருந்தார் பாலன் என்பவரை போன் மூலம் வரச் சொல்லி அழைத்தேன் அவரும் வந்தார் அவர் எதில் வந்தார் என்றால் இரு சக்கர வாகனத்தில் வந்தார் சாட்சி யாருடைய பேனாவில் கையெழுத்து விட்டார் என்றால் நான் வைத்திருந்த பேனாவில் தான் கையெழுத்து விட்டார் சாட்சி கையெழுத்து போட்ட பாலனும் நானும் ஒன்றாகத்தான் போனோம் என்றால் சரியல்ல அவர் தனியாக போனார் நான் தனியாக போனேன் சாட்சி கையெழுத்து போட பாலன் வந்த போது என்ன நேரம் இருக்கும் என்றால் மணி மூணு இருக்கும் அவர் கையெழுத்து விட்டு சென்ற போது என்ன நேரம் இருக்கும் என்றால் 3, 10 அல்லது மூன்று கால் இருக்கும் இவை அனைத்தும் திருக்கோவிலூர் டவுன் டீக்கடையில் வைத்து தான் நடந்தது என்றால் சரிதான் கையெழுத்து போட்ட பிறகு அனைவரும் கலைந்து சென்று விட்டோம் என்றால் சரிதான் எடுத்துச் சென்று விட்டேன் என்றால் நான் தான் வீட்டுக்கு எடுத்துச் சென்றேன் பாண்டை எழுதியது

யார் என்றால் வினோத் குமார் என்பவர் எழுதினார் அவருக்கு என்ன வயது இருக்கும் என்றால் 37 அல்லது 38 வயது இருக்கும் வினோத்குமார் எனது வீட்டில் வந்து பாண்டை நிரப்பி கொடுத்தாரா என்றால் இல்லை பணம் கொடுக்கும் இடத்தில் தான் வந்தார் அவரை யார் வர சொன்னது என்றால் நான் தான் வர சொன்னேன் பாண்டை எழுதியவர் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் அரகண்டநல்லூர் அவர் எனக்கு வேண்டியவர் என்றால் சரியல்ல பழக்கமானவர் தான், திருக்கோவிலூர் சேர்ந்த வழக்கறிஞர் ராஜபாண்டியன் என்பவரிடம் நான் வேலை செய்கிறேன் என்றால் நான் அவரிடம் வேலை செய்யவில்லைராஜபாண்டியன் வழக்கறிஞர் எனது சார் தேர்தல் தகராறு வழக்கு ஒன்றினை நடத்தி வருகிறார், அந்த வழக்கில் நானும் ஒரு தரப்பினராய் உள்ளேனா என்றால் ஆமாம், கடைசியாக எப்போது வழக்கிற்காக நீதிமன்றத்திற்கு சென்றேனா என்றால் ஞாபகமில்லை, பிரதிவாதி குன்னத்தூரில் வசித்து வருவதாக தான் எனது வழக்குரையில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான் பிராமிசரி நோட் எழுதிக் கொடுத்த தேதி 02,04,2024 என்று முதன்மை சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், வழக்குரையில் 02,03,2020 தேதியில்தான் பிரமசரி நோட் ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு ள்ளேன் என்றால் சரிதான், நான் வழக்குரையில் உள்ள அணைத்தையும் படித்து பார்த்தேன் என்றால் சரிதான், பிரதிவாதி என்னிடம் எந்த பணம் வாங்கவில்லைஇ நான் பொய்யாக பிரமசரி நோட்டு தயாரித்து பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, செலவு தொகையுடம் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்று சொ்னனால் சரியல்ல,

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
Sd/-A.Tamilselvan,M.L.,
Principal Subordinate Judge ,
Villupuram